பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

Your Friends
In Finance
★ SHABRA ★
Temporarily Shifted
To:
Uthayan Office
292/2, Navalar Road,
Jaffna.

# உதயன்

விலை ரூபா 3·50

நிதித்துறையில்
உங்கள் நண்பன்
★ ஷப்றா ★
தற்காலிக முகவரி:
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஆடி 08 செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 01 (24 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 152

★ யாழ். குடாநாட்டை நோக்கி

# கிளிநொச்சியிலிருந்தும் மக்கள் இடம் பெயர்வு!

## 48 மணிநேர ஊரடங்கு உத்தரவு

— பளையிலிருந்து அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ராஜ்குமார் —

பளை, ஜூலை 24

**ஆனையிறவில் இருந்து வெளியேறி பரந்தன் வரை முன்னேறி நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவப் படையினர் அப்பகுதியில் தொடர்ந்து தரை, வான் மார்க்கமாக நடத்தி வரும் கடும் தாக்குதலை அடுத்து கிளிநொச்சி, பரந்தன் பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.**

**இவர்கள் உயிருக்கு அஞ்சி யாழ். குடா நாட்டை நோக்கி அகதிகளாக வந்து கொண்டிருக்கின்றனர்.**

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக் காலை முதல் 48 மணி நேர ஊரடங்கு உத்தரவை ஸ்ரீலங்கா அரச படைகள் பிறப்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஊரடங்கு வேளையில் பொதுமக்கள் வீடுகளுக்குள் இருக்கவேண்டும் என்றும் — மக்களின் பாதுகாப்புக் கருதியே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை —

ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறி கிளிநொச்சிப் பக்கமாக முன்னேற முயற்சித்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலையில் பரந்தன் பகுதியில் நிலைகொண்டிருந்தனர் என அறிய வந்தது.

கிளிநொச்சி நோக்கி முன்னேறுவதற்காக படையினர் ஆகாய மார்க்கமாகவும், தரையிலிருந்தும் மூர்க்கத்தனமான தாக்குதல்களைத் தொடுத்திருப்பதாகவும் அறிய வருகிறது.

இதே சமயம், படையினரை முன்னேற விடாது விடுதலைப் புலிகளும் கடுமையாகத் தாக்கி வருகின்றார்கள்.

இந்த மோதல் சம்பவங்களை அடுத்து நேற்று முன்தினம் அதிகாலை முதல் தருமபுரம், புளியம்பொக்கனை, முரசுமோட்டை, 3 ஆம் வாய்க்கால், பரந்தன், உமையாள் புரம், குமரபுரம் கிளி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் இருந்து வெளியேறிய படையினர் 15பேர் தாக்குதலில் பலி!

### விடுதலைப் புலிகள் தரப்பில் ஐவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி, கிளிநொச்சிக்குச் செல்ல முற்பட்ட படையினருடனான மோதலில் இதுவரையில் பதினைந்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மேலும் பலர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை விடுதலைப் புலிகள் தரப்பில் கிளிநொச்சி மகளிர்படைப்பிரிவுப்பொறுப்பாளர் உட்பட 5 போராளிகள் வீரமரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு ஆனையிறவு உப்பளம்வீதி, உல்லாசப் பயண விடுதி என்பவற்றிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் லக்ஸபானா வீதி வழியாக முரசுமோட்டை 2ஆம் கட்டைக்கு வரும்போது விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்துத் தாக்கினர். இந்தச் சம்பவத்திலேயே 15 இராணுவத்தினர் பலியாகினர். பின்னர் கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் பகுதியிலும் பலத்த சண்டை நடைபெற்றது. இந்த மோதலின்போதும் இராணுவத்தினர் தரப்பில் இழப்புகள் ஏற்பட்டன.

இதனையடுத்து இராணுவத்தினர் பரந்தன் சந்தி, பூங்காவனம் சந்தி ஆகிய பகுதிகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

தொடர்ந்து நேற்று பரந்தன் சந்தியில் இடம்பெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கோட்டையில் சிப்பாய் பலி

கொழும்பு, ஜூலை 24

யாழ்.கோட்டை இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று அரச அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### பாலம்பட்டாறில் மோதல்! படையினர் ஆறுபேர் பலி!!

யாழ்ப்பாணம், ஜூலை 24

திருகோணமலை - பாலம்பட்டாறுக்கும், ஜெயபுர இராணுவ முகாமிற்கும் இடையில் விடுதலைப் புலிகளுக்கும் - ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுக்காலை 6-30 மணியளவில் இடம்பெற்ற மோதலில் 6 இராணுவத்தினர் பலியானதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்தினரிடமிருந்து ரி 56-1ரக ரைபிள்கள் மூன்று, ரி 56-2ரக ரைபிள்கள் மூன்று, மகஸீன்கள் - 21, ஐ. எம். ரவைகள் - 500, ஜே. ஆர். ரக கிரனேட் - 8, ஹோல்ஸர்- 6, தலைக்கவசம் - 5 என்பன தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-9]

### ராணுவ அதிகாரி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கிளிநொச்சி இராணுவ முகாமின் மீது நேற்று மாலை 5 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய ''சினைப்பர்'' தாக்குதலில் இராணுவஉயரதிகாரிஒருவர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## யாழ். நகரில் நேற்று 3 வேளைத் தாக்குதல்

### குருநகரில் வீடுகள் நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாண நகரத்தில் நேற்றுக் காலை, நண்பகல், பிற்பகல் ஆகிய மூன்றுவேளைகளிலும் ஆகாயத் தாக்குதல்கள் விட்டு விட்டு நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களினால் குருநகர்ப் பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன.

காலையில் பொம்மர், அவ்ரோ விமானங்களுடன் ஹெலிகளும் சேர்ந்து முக்கால் மணிநேரம் தாக்குதல்கள் நடத்தின. இரு வேளைகளிலும் பீப்பாக் குண்டுகளும் தள்ளிவிடப்பட்டன.

பிற்பகலில் வந்த அவ்ரோக்கள் கோட்டைக்குள் பொதிகளைப் போட்டன. பொம்மர்கள் குண்டுகளை வீசின.

நேற்றைய தாக்குதல்களினால் குருநகர்ப் பகுதியில் மட்டும் பெரும் எண்ணிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஜா பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 24

திரு.நாகேந்திரநாத் ஜா நேற்று கொழும்பில் இலங்கைக்கான புதிய இந்தியத் தூதராகப் பதவி ஏற்றுக் கொண்டார். (உ-எ)

## சிலாவத்துறை நோக்கிச் சென்ற படையினரை மறித்து தாக்குதல்

### ஏழு சிப்பாய்கள் உயிரிழந்தனர்

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை ஆயுதப்படையினர் மீது விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிறு நடத்திய கடும் தாக்குதலில் ஏழு படையினர் கொல்லப்பட்டனர். இதனை அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

விஜயபாகு படைப் பிரிவின் ஓர் அணியினர் பீரங்கிப் படையின் துணையுடன் சென்றுகொண்டிருந்த போது ஏற்பட்ட அம்மோதல் சுமார் 2 மணித்தியாலங்கள் நீடித்ததாகவும் அரசு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. [ஒ-எ]

### சுபநேரம்

24- 7- 90
சுபநேரம்:
10-32— 12-02
இராகுகலம்
3-02—4-32

### வீரமரணம்

காங்கேசன்துறை முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று நடத்திய சினைப்பர் தாக்குதலில் முகாம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான பிரசன்னா (தயாபரன்-புத்தூர்) வீரமரணமடைந்தார்.

## ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தை அவர்களே நிறைவேற்றவில்லை!

### கருணாநிதி கூறுகிறார்

சென்னை, ஜூலை 24

ஜே. ஆர். ராஜீவ் கைச்சாத்திட்ட இந்திய - இலங்கைஒப்பந்தம் அவர்களின் காலத்திலேயே நிறைவேற்றப்படவில்லை.

- இப்படிச் சொன்னார் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி.

இந்தியாவில்உள்ள மாநிலங்கள் அனுபவிக்கும் உரிமைகள் சுதந்திரங்கள் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குக் கிடைத்துள்ளது என்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கூறிவந்தார்.

ஆனால் அப்படியான உரிமைகள் கிடைக்கவே இல்லை என்று வடக்கு - கிழக்கு மாகாணசபை முதலமைச்சரான திரு. வரதராஜப் பெரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### செள். பற்றிக்ஸ் கல்லூரி

## அகதி முகாமுக்கு அருகில் குண்டு விழுந்து வெடித்தது!

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆயிரக்கணக்கான அகதிகள் தங்கியிருக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அமைந்துள்ள முகாமுக்கு மிகச் சமீபமாக நேற்று பாரிய குண்டு ஒன்று விழுந்து வெடித்தது.

அதிஷ்டவசமாக அகதி முகாமில் தங்கியிருந்தவர்களுக்கு உடல், உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை.

விமானக் குண்டு வீச்சு நடந்தபோது அகதி முகாமில் இருந்த அனேகர் பதுங்கு குழிகளில் ஒளிந்து கொண்டனர். இன்னும் சிலர் நிலத்தில் குப்புறப் படுத்துத் தப்பிக் கொண்டனர்.

குண்டு வீச்சு இடம்பெற்ற போது சென். பற்றிக்ஸ் கட்டடம் அதிர்ந்து குலுங்கியது. அங்கிருந்த அகதிகள் பெரும் பீதியடைந்தனர். (ஒ-10-51)

## சுதந்திர தாயகம் அமைக்க புலிகள் - தமிழக அரசு முயற்சி

### ராஜீவ் காந்தி குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூலை 24

இலங்கையில் சுதந்திரத் தாயகம் ஒன்றை நிறுவும் விஷயத்தில் தமிழக அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இந்த விடயத்தை தான் அதிகாரபூர்வ வட்டாரங்கள் மூலம் அறிந்து கொண்டதாகவும் அவர் சொன்னார்.

புதுடில்லியில் கடந்த ஞாயிறு ஆரம்பமான இந்திரா காங்கிரஸ் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் திரு. ராஜீவ்காந்தி இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் கரையோரப் பகுதிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் திரு. ராஜீவ்காந்தி மேலும் தெரிவித்தார். (உ-எ)

## கல்வி அடக்கு முறைகளை கண்டித்து நாளை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கல்வி தொடர்பான அடக்கு முறைகளைக்கண்டித்து தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் நாளை புதன்கிழமை மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளது.

நாளைக் காலை 9.00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் உயர்தர வகுப்பு மாணவர்களையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் சீருடையுடன் சமுகம் அளிக்கும்படி மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இந்த ஊர்வலம் தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சீனியின் விலை குறைப்பு!

கொழும்பு, ஜூலை 24

வெள்ளைச் சீனியின் விலை ஒரு கிலோ 27 ரூபா 50 சதமாக உடனடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதனை உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி நேற்றுத் தெரிவித்தார். (உ-எ)

### முச்சந்தி முரளி



இஞ்சை கைக்குக் கிடைக்காத சாமானுக்கு விலையை குறைச்சிருக்கினம் போலை...

## போரை நிறுத்த தமிழ் மாதர் குரல்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு, கிழக்கில் நிகழும் போரை உடனடியாக நிறுத்தும்படியும், போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கச் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமைப்புகளை அனுமதிக்கும்படியும் தமிழ் மாதரின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தலைவி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், தலைவி- யாழ். வை. டபிள்யூ.சீ.ஏ., தலைவி அன்னையர் முன்னணி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரவுக் குண்டுத் தாக்குதலில் பல வீடுகள் சேதமுற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 24

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இருள் படர்ந்த வேளையில் யாழ். நகரில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு மற்றும் றொக்கெட் தாக்குதல்களில் பலவீடுகள் சேதமடைந்தன.

குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களின்போது மக்கள் பதுங்கு குழிகளில் புகுந்து கொண்டதில் உயிரிழப்பு ஏற்படவில்லை.

நாவலர் வீதியில், மனோகராச்சந்திக்கு அண்மையில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன. யாழ். 6ஆம் குறுக்கு வீதியிலும் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமுற்றன. இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் சிறுசேதங்களுக்கு இலக்காகின. (ஒ-51-10)

## வவுனியாவில் நேற்றும் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது இரண்டாவது நாளாக நேற்றும் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை பிரஸ்தாப முகாமின் சுற்றாடலிலுள்ள குருமண்காடு, வைரவப் புளியங்குளம், கரப்பன்காடு, ரயில் நிலையப் பகுதி, நகரசபை விடுதி, ஆகிய பகுதிகளில் தமிழர் வெளியேறிய வீடுகளை சிங்களக் குண்டர்கள்

[4ஆம் பக்கம் பார்க்க]

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோவில்களுக்குத் தேவையான பூவசமணி, அசையா மணி, திருவாசி குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம், கும்பச் செம்பு, அடுக்குத்திபம், பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருள்களும், எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸிம்ஸ் 297, K.K.S வீதி. தற்போது 76/2 நாவலர் வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம். (13789)

பொமனேரியன் நாய்க்குட்டிகள் (ஆண், பெண்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 12, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (13801)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கு உகந்த நல்ல இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு. விலைகுறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா அன் பிறதர்ஸ். பிரம்படி லேன், கொக்குவில். (சி/5277)

### தவறிவிட்டது

க. மணிவண்ணன் 693360200V இலக்க அடையாள அட்டை திருநெல்வேலி சந்தையில் தொலைந்து விட்டது. எடுத்தவர்கள் 176, பிறவுண் வீதி, இல்லத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (13798)

### தகவல் தரவும்

வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடமையாற்றும் ஏழாலையைச் சேர்ந்த ஜெயபதியை மனைவி தேடுகிறார். விபரம் தெரிந்தவர் கீழ் உள்ள முகவரிக்கு அறியத்தரவும். சு. ஆசைப்பிள்ளை, சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (13690)


# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கோவையில் வேலை வாய்ப்பு

சென்னை, ஜூலை 24 மண்டபம் முகாமிலிருந்து கோவை மாவட்டத்துக்கு அனுப்பப்பட்ட இலங்கை தமிழ் அகதிகளுக்கு தற்காலிக வேலை வாய்ப்பு வழங்க கோவை மாவட்ட அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்த தகவலை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் என்.ராஜன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2,187 பேரைக் கொண்ட 555 அகதிக் குடும்பங்கள் கோவை மாவட்டத்தில் குடியேற்றப்பட்டுள்ளன.

இவர்கள் 8 இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு கிராம மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் தற்காலிக வேலை வாய்ப்பு வழங்க மாவட்ட அதிகாரிகள் உத்தேசித்து வருகின்றனர் என்று அவர் சொன்னார். (இ-9)

## டாக்டர்களின் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24 வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரச வைத்தியர் சங்கம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணிபுரிந்த டாக்டர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களை எடுத்துக் காட்டியுள்ள சங்கம் டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், அவர்களின் நலன்கள் குறித்து அறிக்கை தருமாறும்கேட்டுள்ளது. (அ-3)

## இடம் பெயர்ந்த ஆசிரியருக்கு ரூபா ஆயிரம் முற்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை24 யாழ்-மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களுக்கு ரூபா ஆயிரம் சம்பள முற்பணமாக அடுத்த வாரம் வழங்கப்பட இருக்கிறது.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள ஆசிரியர்களுக்கு இது வரை முற்பணம் வழங்கப்படவில்லை.

இடம் பெயர்ந்து வந்துள்ள ஆசிரியர்கள் தமது மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள கல்வி அலுவலக அதிகாரிகளின் சிபார்சுடன் விண்ணப்பத்தையாழ்-கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பணித்துள்ளார்

அதே நேரம் இடம் பெயர்ந்து வந்த கல்வி அலுவலக ஊழியர்களுக்கு ஜூலைமாதச்சம்பள முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [இ-3]

## நீதிமன்ற ஊழியருக்கு சம்பளம் இல்லை

கொழும்புத்துறை, ஜூலை 24 வடமாகாண நீதிமன்ற ஊழியர்கள் பலருக்கு ஜூன் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படவில்லை.

நீதிமன்ற ஊழியர்களின் சம்பளப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வங்கிகளில் மட்டுப்படுத்தப்பட்ட பணக்கொடுப்பனவு. தபால் சேவையின்மை காரணமாக இத்தமாதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-30)

## சுன்னாகம் தபால் சேவை

சுன்னாகம் தபாலகத்தில் கொழும்பு உட்பட பிற மாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்குமான தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இத் தபால்களை தினமும் காலை 10 மணிக்கு முன்பாக ஒப்படைத்தால் அன்றன்றே கட்டும் தபாலில் சேர்க்கக் கூடியதாக இருக்குமென சுன்னாகம் தபாலதிபர் தெரிவித்தார்.

இவை யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்டு சந்தர்ப்பம் கிடைக்கும் போதுவிசேட ஒழுங்குகள் மீது எடுத்துச் செல்லப்படும். [இ]

## திருடன் அகப்பட்டான்

வட்டுக்கோட்டை, ஜூலை24 சங்கானை யாழ். வீதியிலுள்ள கடை ஒன்றில் றேடியோ உதிரிப்பாகங்களை திருடியவர் சங்கானை ப. நோ. கூ. சங்க கிளை இராக்காவலாளியால் பிடிக்கப்பட்டார்.

வட்டுக்கோட்டை மாவடி விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் திரு. ஐயாவிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். திருடப்பட்ட சாமான்களும் பெறப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இக்கடையில் இடம்பெற்ற இரண்டாவது திருட்டு இது ஆகும். (இ-161)

## நொறாட் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24 பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உதவிகளை வழங்குவதுடன் அவர்கள் ஆறுதல் பெறக் கூடிய ஆலோசனைகளையும் வழங்குமாறு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் (நொறாட்) தனது கிளைச் சங்கங்களைக் கேட்டுள்ளது.

சகல பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு அந்தந்தப் பகுதி சங்க உறுப்பினர்கள் வேண்டிய உதவிகளை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## டில்லி விஜயம் வெற்றியாம்

கொழும்பு, ஜூலை 24 இலங்கை நாடாளுமன்றக் குழுவின் இந்திய விஜயம் பூரண வெற்றி அளித்துள்ளதாக, அக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சென்றிருந்த கல்வி துணை அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார். (இ-எ)

## திருட்டு

புங்குடுதீவு, ஜூலை 24 புங்குடுதீவு, ஊரதீவுப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் கடந்த ஞாயிறு அதிகாலை அத்தியாவசியப் பொருள்களான சீனி, அரிசி, பால்மா என்பன திருடப்பட்டுள்ளன. [இ-131]

## "நிழல்கள்"

யாழ்ப்பாணம், ஜூலை24 புங்கங்குளம் தனியார் கல்வி நிலையம் ஒன்று "நிழல்கள்" என்ற சமூகசேவைப் பிரிவை ஆரம்பித்துள்ளது.

அகதி முகாம் ஒன்றைப் பொறுப்பேற்றல், பண்டேஜ் தயாரிக்கும் துணிகளைச் சேகரித்தல், வீட்டுத்தோட்ட மாதிரிப் பண்ணை நடத்துதல் ஆகியவற்றை இவர்கள் மேற்கொள்ள உள்ளனர்.

# அத்தியாவசியபொருள்களை எடுத்துவர படையினர் தடை!

யாழ்ப்பாணம், ஜூலை 24 வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவர ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் தடை விதித்து வருகின்றனர்.

யக்காவ இராணுவ முகாமில் வைத்து தமிழர்கள் எடுத்து வரும் பொருள்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்படுகின்றன. தமிழர் ஒவ்வொருவரும் 2 கிலோ மா, ஒரு கிலோ சீனி, ஒரு போத்தல் மண்ணெண்ணை ஆகியன மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை மதவாச்சிப் பகுதியிலிருந்து சில முஸ்லிம்கள் மா, சீனி, பெற்றோல் என்பனவற்றை எடுத்துவந்து வவுனியாவில் வைத்து அதிக விலைக்கு விற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)


## இடமாற்றம்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த
மெடிசினா அல்டநேற்றிவா
அக்குபங்சர் கிளினிக்
தற்போது
இல: 95, யாழ் வீதி, மானிப்பாய்க்கு
(சந்தைக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில)
இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நோயாளர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

ஆஸ்த்மா, மூட்டுவாதம், பாரிசவாதம், ஒற்றைத் தலைவலி, தோல்வியாதிகள், நரம்பு தொடர்பான நோய்கள் ...... போன்ற தீராத நாட்பட்ட வியாதிகளுக்கு விசேட சிகிச்சையளிக்கப்படும். [13691]

## இடமாற்றம்

### ரதி வோச் வேக்ஸ் & ஸ்ரோர்ஸ்

44, 46, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகளுக்காகத் தந்த மணிக்கூடுகள், T. V. றேடியோ ஆகியவற்றை 2 மணிக்குப் பின் கீழ் வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சேகர் நடராசா
"இந்துமதி"
12, பொன்னையா லேன்,
(உபதபால் அலுவலகத்திற்கு அருகில்)
ஆனைக்கோட்டை.
[13802]

## M THREE TRAVELS

சிங்கள ஏகாதிபத்திய அரசுக்கெதிராக போரிட்டு
வீரமரணம் அடைந்த வேங்கைகளிற்கு
எமது வீர அஞ்சலி

இப்போரில் காயமடைந்த வீர வேங்கைகள் விரைவில் சுகமடையவும், வெற்றி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

M THREE TRAVELS தாபனத்தினர் இவர்களை உடனடியாக கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறார்கள்.

1. சங்கரநாதன் சிவராஜா (விக்கி)
2. கணபதி செல்லத்துரை (அளவெட்டி)
3. அப்புத்துரை சத்தியகுமார் (கலட்டி)
4. ராசன் முத்துராஜா (பளை, வீமன்காமம்)
5. அருளானந்தம் திலீப்குமார் (யாழ்ப்பாணம்)
6. கந்தசாமி குமாரதேவன் (தெல்லிப்பழை)
7. தம்பிமுத்து தங்கராஜா (துணுக்காய்)
8. மார்க்கண்டு நேசகுமார் (தெல்லிப்பழை)

## M Three Travels

20, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி வடக்கு.
[விங் கொம்பனிஅருகாமை]

[சி-5282]


## மக்கள் வங்கியில் மின்கட்டணம்

கொழும்பு, ஜூலை 24 நாடெங்கும் உள்ள மக்கள் வங்கிக்கிளைகளில் வேலை நாட்களில் தினமும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை மின்கட்டணங்களைச் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை இம்மாதம் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்திருப்பதாக மக்கள் வங்கித் தலைவர் லஷ்மன் வட்டவல தெரிவித்தார். (இ-எ)

## பசளை கிருமிநாசினி தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் பசளை, கிருமிநாசினிகள் போன்றவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் சிறுபோக நெல் வேளாண்மை பாதிப்படையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது

இதேவேளை மண்ணெண்ணெய் இல்லாததால் வெங்காயம், மிளகாய், காய்கறி செய்கையாளர்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்கமுடியாத நிலையில் உள்ளனர்.

இந்தப் பயிர்களையும் கைவிடவேண்டிய நிலைமை உருவாகிவருகிறது (இ-76)

## முப்தி முகமதுவின் தமிழக விஜயம் ரத்து

சென்னை, ஜூலை 24 இந்திய மத்திய உள்துறை அமைச்சர் முப்தி செய்யத் முகமது நேற்று தமிழகத் திற்கு மேற் கொள்ளவிருந்த விஜயம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

அகதிகள் முகாம்களுக்கு அமைச்சர் முகமதுவை அழைத்துச் சென்று காட்டவும் தமிழக அரசு ஒழுங்கு செய்திருந்தது. (இ-எ)

## சங்கக்கடையில் களவு

மயிலணி, ஜூலை 24 சுன்னாகம் பல. நோ. கூ. சங்க இணுவில் 13 ஆம் கிளையில் வெள்ளி இரவு பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. (இ-89)


## சத்தியனுக்கு

தம்பி சத்தியன் நீ சென்ற நாளிலிருந்து அம்மா சரியாசச் சாப்பிடுவதில்லை. அப்பாவும் சுகமில்லாது இருக்கிறார். உன் வரவை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். உடன் வரவும்.

சாந்தினி, ரமணன்.
[13805]

## தம்பி குமரா உடனே வா!

இருதய நோயாளியான உன் தந்தை படுக்கையில்! உனது தாய் மனநோயாளியாகி விட்டார் நாமும் உன்னைக் காணாது தவிக்கின்றோம். குமரா உடனே வா வெனக் கெஞ்சிக் கேட்கின்றோம்.

சகோதரிகள்;
சிவதேவி,
சிவச்செல்வி
சிவகாமி.
(13804)

## தாயக மீட்பு நிதி

தாயக மீட்பு நிதிக்கென பவுண் கைவசம் இல்லாத பொதுமக்கள் அதற்குப் பதிலாக 10 ஆயிரம் ரூபாவை வழங்கலாம். தாயக மீட்பு நிதிக்கென பவுண் வாங்க வரும் எமது குழுவினர் பவுண் இல்லாதவர்களிடம் பவுணுக்குப் பதிலாக 10 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

- தமிழீழ விடுதலைப் புலிகள் -

## 60வது நிறைவு நாள் அஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி இராசு இராசமணி

மலர்வு: 09 - 06 - 1937
மறைவு: 27 - 05 - 1990

அன்பின் தெய்வமே எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா படுக்கையில் வைத்து பார்க்கக் கூடாதென்றோ உன் உயிர் கவர்ந்தான் காலன்.

அம்மா உன் பெயர் யோகம் யோக்கியமாய் எம்மை வளர்த்தாய் எம் உள்ளத்திலும் வீட்டிலும் என்றென்றும் யோகமாய் இருப்பீர்களாக.

27-05-1990 அன்று நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும். நன்றி தெரிவிப்பதோடு 25-07-90 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கந்தர்மடம்,
[13770]

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சின்னையா சிவானந்தன்

(ஆனந்தன்)
(ரதி வாச் வேக்ஸ் முகாமையாளர்)

அன்னையின் மடியில்: 13 - 02 - 1943
அரக்கர் அழிப்பில்: 24 - 07 - 1983

ஏழாடி கண்டும் ஏற்றம் எதுவும் காணவில்லை
உளம் உருகி நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திக்கு!

உங்கள் பிரிவால் வாடும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
நிஷாந்தி, பிரசன்னா, சிந்துஜா.

"நிஷாந்தி வாசா"
131/1, பலாலி றோட்,
திருநெல்வேலி.
(13684)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உயர்தரப் பரீட்சை

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை, வடக்கு-கிழக்கில் ஒத்திவைக்கப்படும் என்று கல்வி அமைச்சர் திரு. அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்!

வடக்கு - கிழக்கில் பரீட்சையை ஒத்திவைப்பதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதே தவிர, அதன் தொடர் ஏற்பாடாக, பரீட்சைப் பகுதி அதனை ஊர்ஜிதம் செய்து எவ்வித அறிவிப்பையும் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.

வடக்கு - கிழக்கில் மட்டும் பரீட்சையை ஒத்திவைத்தால், தமிழ் மாணவருக்கு அரசாங்கம் உதவிவிட்டதாக எண்ணக் கூடாது. தமிழ் மாணவர்களின் உயர்கல்வியில் அக்கறை இருந்திருந்தால் நாடு முழுவதிலும் அரசு பரீட்சையை ஒத்தி வைத்திருக்கவேண்டும்.

''தமிழ் மாணவர் வேறு தேசத்தவரா?'' என்ற தலைப்பில் இப்பத்தியில் இம்மாதம் 12 ஆம் திகதி வெளியான ஆசிரியத் தலையங்கத்தில் ஏற்கனவே குறிப்பிட்டது போல—

உயர்தரப் பரீட்சை பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டிப் பரீட்சையும் ஆகும். ஏழு மாகாணங்களிலும் பரீட்சையை இப்போதும், வடக்கு-கிழக்கில் பின்னரும் நடத்தும்போது பல்கலைக்கழக அனுமதிக்கு வெவ்வேறு புள்ளி அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

கொழும்பிலும், புத்தளத்திலும் தமிழ்மொழி மூலம் தோற்றும் மாணவர்களின் அனுமதிப் புள்ளி ஒன்றாகவும், வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களின் அனுமதிப்புள்ளி வேறாகவும் இருக்கப்போகிறது.

அதுமட்டுமல்ல, பரீட்சை வினாத்தாள் தரங்களிலும் வித்தியாசம் இருக்கும். அவற்றை எப்படி ஒரே அளவு கோலாகக் கருதமுடியும்?

பிறமாகாண மாணவர்கள் வடக்கு- கிழக்கு மாணவரை விட அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் நியாயமற்ற நிலையும் இதனால் உருவாகும்.

தமிழ் மாணவருக்கு ஒரு நீதி, சிங்கள மாணவருக்கு வேறு நீதி என்ற நிலைக்கு மேலதிகமாக வடக்கு-கிழக்கு மாணவருக்கு ஒரு நீதி, வெளி மாகாணத் தமிழ் மாணவருக்கு இன்னொரு நீதி என்ற வேண்டாத முரண்பாடு தோற்றுவிக்கப்படும், இது தமிழ் மொழி மூலம் தோற்றும் மாணவர்களுக்கிடையில் ஓர் பிளவு நிலையை உருவாக்கும் சதியாகும்!

மேலும், வடக்கு-கிழக்கில் இப்போது நடக்கும் யுத்தத்தால் இப் பகுதி வாழ் தமிழ் மாணவரின் உளவளம் மிகப் பெருமளவில்பாதிக்கப்படும் அதிலிருந்து அவர்கள் மீண்டு இயல்புநிலை எய்துவதற்கு நீண்ட காலம் பிடிக்கும். அப்போதும் அவர்கள் சாதாரண நிலையில்இருந்து பரீட்சைக்குத் தயார் செய்வது போய ஆயத்தப்படுத்துவது அசாத்தியம்.

முன்னுக்கும் பின்னுக்குமாகப் பரீட்சைகள் நடத்தப்பட்டால் பல்கலைக்கழக அனுமதியிலும் காலவேறுபாடு இருக்கும், இதிலும் வடக்கு- கிழக்கு மாணவர்கள் தான் பாதிக்கப்படுவார்கள். அவர்களின் காலம் வீணடிக்கப்படும்,

எனவே கடந்த ஆண்டைப் போல, இம்முறையும் ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையை நாடு முழுவதிலும் ஒத்தி வைத்து -ரத்துச் செய்து- பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் நடத்த வேண்டும்.

எல்லா இன மக்களுக்கும் சமநீதி வழங்குவதாகக் கூறப்படுவது உண்மையாயின், அரசு இதிலாவது அதனை நிரூபித்துக் காட்டட்டும்,

# பொம்மர்-ஹெலி தாக்குதலால் மாங்குளம் சுடுகாடாகக் காட்சி

## முகாமைச் சூழ உள்ள வீடுகள் பலத்த சேதம்

மாங்குளம், ஜூலை 24

மாங்குளத்தில் பொம்மர்–ஹெலி தாக்குதல்கள் காரணமாக அப் பகுதி சுடுகாடு போலக் காட்சி அளிக்கிறது. அரச - தனியார் கட்டடங்கள் பல சேதம் அடைந்துள்ளன.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை அடுத்து பலவர்த்தக நிலையங்கள் சேதமடைந்தன.

வண்ணனின் சிலையின் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டுள்ளது. விஸ்காஸ் ஹோட்டலின் பின் பகுதி எரிந்துள்ளது. இலங்கை வங்கிக் கட்டடம் கதவுகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை விடுதியும் சேதமடைந்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான மரங்கள், சிமெந்துகள் காணாமல் போய்விட்டன.

இப்பகுதி மக்கள் கிடைத்த பொதிசளுடன் கரிப்பட்ட முறிப்பு, தச்சடம்பன், கனகராயன் குளம், ஒட்டுசுட்டான், துணுக்காய் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

மாங்குளம் ரயில் நிலையம் ஷெல்லினால் சேதமடைந்துள்ளது.

கரிபட்ட முறிப்பில் விடுதலைப் புலிகளின் மரக்காலை பொம்மர் வீச்சினால் சேதமடைந்தது. இதனை அடுத்து இப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த சிறுதானிய உற்பத்தியை இம்முறை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவ முகாமைச் சுற்றியுள்ள வீடுகள் அனைத்தும் பொம்மர் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன.

இதே வேளை விடுதலைப் புலிகள் இராணுவ முகாமைச் சுற்றி பாதுகாப்பு அரண்களை அமைத்து இராணுவம் முன்னேறாதவகையில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் (இ-94)

# கிறிஸ்தவ மதகுரு ஒருவர் காத்தான்குடியில் கொலை?

யாழ்ப்பாணம், ஜூலை 24

மட்டக்களப்பு, தாளங்குடா கத்தோலிக்க தேவாலயத்தைச் சேர்ந்த வண. பிதா அம்றோஸ், காத்தான்குடியில் வைத்துக் கத்தி போன்ற ஆயுதங்களால் வெட்டிக்கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் மதகுரு காத்தான்குடியில் தாக்கப்பட்டதால் காயமுற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

இதுபற்றிய விவரமாவது:- குருக்கள் மடத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட ஹெலித் தாக்குதலில் இளம் பெண் ஒருவர் காயமுற்றார். அந்தப் பெண்ணை மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்காக வண. பிதா அம்றோஸ் மற்றொருவரின் உதவியுடன் எடுத்துச் சென்றார்; மதகுருவும் அடுத்தவரும் திரும்பிவரும்போது, முஸ்லிம்களின் பகுதியான காத்தான்குடியில் வைத்துத் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவரும் மரணமடைந்துவிட்டதாக ஒருசெய்தியும், மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தியும் தெரிவிக்கின்றன. (அ-9)

# கிளிநொச்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

அவர்கள் காட்டுப்பகுதி ஊடாக நேற்று முன்தினம் சாரி சாரியாக குடாநாட்டை நோக்கி வந்தனர்.

### கால்நடையாக வந்தனர்

இவர்களில் பலர்இரவுவேளைகளில் பளை பகுதியிலுள்ள கடைகள், சந்தை கட்டிடங்கள் என்பவற்றில் தங்கி இருந்து கால்நடையாகப் பயணத்தை தொடர்ந்தனர்.

இன்னொரு பகுதி மக்கள் முகமாலை வேளாங்கண்ணி ஆலயம், மற்றும் பாடசாலைகளிலும், சாவகச்சேரி பகுதிகளிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேவேளை பரந்தன் பகுதியில் படையினர் நடத்திய தாக்குதலில் பல வீடுகள், கடைகள், பாடசாலைகள், ஆலய கட்டிடங்கள் என்பன சேதமடைந்தன. பல பொது மக்கள் கொலையுண்டிருக்கலாம் என அஞ்சப்பட்டது. மேலும் பலர் காயமடைந்தனர்.

### இறந்து கொண்டு இருக்கிறார்கள்

காயமடைந்த பலர் முதலுதவியோ, வைத்திய சிகிச்சையோ அளிக்கப்படாமல் இறந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காயமடைந்தவர்களில் சிலர் முரசுமோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். ஆயினும் அங்கு போதிய பருத்துவ வசதிகள், சத்திரசிகிச்சை வசதிகள் என்பன இன்றியும், மருந்துவகை இன்றியும் பலர் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னேறிவரும் இராணுவத்தினர் வழியிலேகாண்பவர்களை சுட்டுக் கொன்று வருவதாகவும் சொல்லப்பட்டது.

உமையாள்புரம் பகுதியில் இராணுவத்தினரைக் கண்டு ஓடிச் சென்று வீட்டுக்குள் புகுந்து கட்டிலுக்குள் ஒளிந்து கொண்ட - கால்நடை மேய்ப்பவரான - பண்டாரம் என்னும் வயோதிபரை இராணுவத்தினர் வீட்டுக்கு வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றதாகக் கூறப்பட்டது.

பொம்மர் தாக்குதலுக்கு இலக்காகி புளியம்பொக்கனை பகுதியில் 8 வயது சிறுமியான ராசையா சுஹாசினி உயிரிழந்தார். இவரது சடலம் நேற்று சாவகச்சேரிக்கு எடுத்துவரப்பட்டது.

முரசுமோட்டை 2 ஆம் கட்டைப் பகுதியில் எரிபொருள் கடை வைத்திருந்த சிவக்கொழுந்து என்பவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி காயமுற்றார். ஆயினும் போதிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்படாததை அடுத்து அவர் உயிரிழந்தார்.

### தம்பதியருக்கு நேர்ந்த கதி

முரசுமோட்டை செல்லையா கடைச் சந்தியில் குழந்தை ஒன்றை தூக்கிக் கொண்டு அகதியாக இடம் பெயர்ந்த ஒரு தம்பதியர் பொம்மர் தாக்க வருவதை கண்டு குழந்தையை அருகிலிருந்த மதிலுக்கு அப்பால் தூக்கி எறிந்துவிட்டுப் பாய்ந்தனர். ஆனால் பொம்மர் தாக்குதலினால் தம்பதியர் உயிரிழந்தனர். குழந்தை சிறு காயத்துடன் தப்பியது.

இச்சம்பவத்தில் சிவபாத சுந்தரம், சிறீ ஆகிய இருவர் காயமடைந்தனர்.

இதேபோல படையினரின் தாக்குதலினால் உயிரிழந்த பலரின் சடலங்கள் தெரு தெருவாகக் கிடப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

முன்னேற முயற்சிக்கும் இராணுவத்தினருடன் கவச வாகனம் ஒன்றும் கூடவருவதாகக் கூறப்பட்டது.

பரந்தன் இராசயனக் கூட்டுத்தாபனத்திற்கு அருகே நீர்தேங்கி நிற்கும் பகுதிக்குப் பக்கத்தில் சுமார் பத்துத் தடைவைகளுக்கு மேல் தரையிறங்கிய ஹெலிக்கொப்டர்கள் மூலம் மேலும் துருப்புக்கள் இறக்கப்பட்டதாகவும்—

இந்த ஹெலிக்கொப்டர்கள் புறப்பட்டுச் செல்லும்போது காயமுற்ற படையினரையும் உயிரிழந்த படையினரின் சடலங்களையும் ஏற்றிச் சென்றதாகவும் கூறப்பட்டது. (உ-9)

# யாழ்ப்பாணத்திலும் எமக்கு உளவாளிகள் இருக்கிறார்கள்

## ரஞ்சன் நாடாளுமன்றில் சொன்னது

கொழும்பு, ஜூலை 24

யாழ்ப்பாணத்திலும் எமக்கு உளவாளிகள் இருக்கிறார்கள். சுதந்திரக் கட்சியிலும் எமது உளவாளிகள் இருக்கிறார்கள்.

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா, அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது;

முக்கிய பேச்சுக்களை நடத்த கொழும்பு வந்த விடுதலைப்புலிகளைஐந்து ஸ்டார் ஹோட்டல்களில் தங்க வைத்ததற்காக எம்மீது குறைகூறப்படுகிறது.

கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல் அல்லது சரஸ்வதி லொட்ஜில் அல்லது ஏதாவது முடுக்குகளில் வைத்தா அவர்களுடன் பேச்சு நடத்தியிருக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள்?

ஜே. வி. பி தீவிரவாதிகள் நேர்மையானவர்கள். பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வரவில்லை. சண்டையிட்டார்கள். ஆனால் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே யுத்தத்துக்குத் தயாரானார்கள்.

### உளவாளிகள்

நாம் அவர்களை நம்பினோம். முதலில் எவரையும் நம்பாமல் அவர்களுடன் பேச்சு நடத்த முடியாது.

யாழ்ப்பாணத்திலும்எமக்கு உளவாளிகள் இருக்கிறார்கள் சுதந்திரக் கட்சியிலும் எமது உளவாளிகள் உள்ளனர்;

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை தூக்கிஎறிந்துவிட்டோம். இனி வடக்கில் தான் எமது நடவடிக்கைகள் இருக்கும்.

இருந்து பாருங்கள் விரைவில் எமது யுத்த இயந்திரம் பற்றி சபையின் இருதரப்பினரும் பெருமைப்படுவார்கள்

இன்றுவரை எமது படையினரில் 546 பேர் இறந்தனர். 612 பேர் காயமடைந்தனர். விடுதலைப்புலிகளிடம் நாம் ஆயுதங்களை கொடுக்கவில்லை.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண நாம் தயாராக உள்ளோம். அதனால் தான் விடுதலைப் புலிகளை ஐந்து ஸ்டார் ஹோட்டல்களில் தங்க வைத்தோம்.

இதற்காக குறைப்படுகிறீர்கள். அடுத்த முறை எல்லா குழுக்களையும் சரஸ்வதி லொட்ஜில் பேச்சுக்களுக்காக அழைக்க இருக்கின்றேன்.

அரசாங்கத்துக்கும் முதுகெலும்பு உண்டு என்பதை தனது சண்டையின் மூலம் ஜே.வி பியினர் நிரூபித்தனர். விடுதலைப் புலிகளுடனான சண்டை, அரசுக்கு இப்போது போனஸாக வந்துள்ளது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்று இப்போது நீங்கள் நம்புகின்றீர்கள்.

வெகு விரைவில் இந்த நாட்டு மக்களை சிவில் யுத்தத்தில் இருந்து விடுவிப்போம் என்று நான் உறுதி கூறுகின்றேன்.

இப்படி திரு. ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார். (இ-எ)

# இந்தியா முயன்றால் சாதகமான முடிவு

## டில்லியில் அநுரா கருத்து

புதுடில்லி, ஜூலை 24

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா முயற்சிகளை மேற்கொண்டால்சாதகமானபலன்கிடைக்கக்கூடும்.

சுதந்திரக்கட்சி எம். பி அநுராபண்டாரநாயக்கா புதுடில்லியில் செய்தியாளர் மாநாட்டில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச நாடுகளின் ஆதரவை ஜனாதிபதி பிரேமதாஸா கோரியதை நான் ஆதரிக்கவில்லை,

விடுதலைப்புலிகளை வழிக்குக் கொண்டு வருவதற்காக இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்துவதை நான் வரவேற்கின்றேன்.

இந்தியாவை இலங்கை விரோதித்துக்கொள்வதனால் எதுவித பலனும் ஏற்படாது.

யாழ்ப்பாண மக்களின் ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்றுள்ளதால் அவர்களை இராணுவ ரீதியில் கட்டுப்படுத்துவது கடினமான காரியமாகும்.

தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு பெருமளவில்வந்து சேருவதால்இந்திய அரசுக்குப் பெரிய பிரச்சினைகள் ஏற்படுவது உண்மைதான்.

அகதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு நாட்டு அரசுகளும் இணைந்து ஒரு திட்டத்தைத் தயாரித்து செயல் படுத்துவது அவசியமானதாகும்.

இப்படி திரு. அநுராபண்டாரநாயக்கா தெரிவித்தார்.

# இலங்கையருக்கு சிறை

வாஷிங்டன், ஜூலை 24

கிரேக்க கப்பல் ஒன்றில் பணிபுரிந்த இரண்டு இலங்கையருக்கு போதைவஸ்துக் குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க நீதிமன்றம் ஒன்று தலா 12 ஆண்டு காலசிறைத் தண்டனையை விதித்துத் தீர்ப்பு வழங்கியது. (இ-எ)

# கிழக்கில் ராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 24

இராணுவ நிரந்தரத் தொண்டர்படைக்கு ஆட்சேர்ப்பும் ,நேர்முகப்பரீட்சையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் சாய்ந்தமருது அல்ஹிலால் மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது.

இராணுவத்தில் சேர பெருந்திரளான முஸ்லிம் இளைஞர்கள் வரிசையில் நின்றனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

# எவ்வளவு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு போராட்டம் உத்வேகம் அடையும்

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகமைதானத்தில் கடந்த புதன்கிழமை கரும் புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத் கப்டன் கொலின்ஸ் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரைகள் கீழே சுருக்கமாகத் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

### யோகி

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகி பேசியதாவது:-

இதுவரை காலமும் தமிழீழத்தில் ஏதோ ஒரு பகுதியில தான் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது பருத்தித்துறை முதல் குமணை வரை தமிழீழமெங்கும் போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத்தடை போன்றவற்றால் தமிழீழ மக்களை ஸ்ரீலங்கா அரசு நசுக்க முனைகின்றது எமது வளங்களை நாங்களே பெருக்கிக் கொள்ள வேண்டும். தமிழீழமெங்கும் போர்க்கால நெருக்கடி ஏற்பட்டுள்ளது. போராட்ட அழுத்தத்தை எல்லோரும் உணர்கின்ற காலகட்டம் இது

எவ்வளவுக்கு எவ்வளவு அழுத்தம் எம்மீது பிரயோகிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு எமது போராட்டம் உத்வேகமடைகிறது. எமது இயக்கம் இன்று பல்லாயிரக் கணக்கான போராளிகளைக் கொண்டபடையாகப் பரிணாமவளர்ச்சிபெற்றிருக்கின்றது. இது உலகிலேயே தலைசிறந்த சரந்தடிப்படையாக -கட்டுக்கோப்புள்ள படையாக- சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்டஇயக்கமாக விளங்குகின்றது.

தமிழீழத் தாயகத்தை வென்றெடுப்பதற்காக தமது இன்னுயிரைத் தியாகம்செய்த கரும் புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோருக்கு வீர அஞ்சலி செலுத்தும் வேளையில் அவர்களது இலட்சியத்தை நிறைவேற்ற மக்கள் முழுமையான அளவில் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

### சுந்தரி

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொதுச் செயலாளர் செல்வி சுந்தரி பேசியதாவது:-

சமாதானம் என்ற போர்வையிலே விடுதலைப் புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே தமிழர்களை அழிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு இராணுவ நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. தரைமட்டமாக்கப்பட்ட கொக்காவில் முகாமில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் நிலவறைகள், பதுங்கு குழிகள், சென்றி அமைவிடங்கள் என்பன இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன;

அரசுடன் சமாதானம் பேசி இருக்கலாமே என்ற நப்பாசையை விடுத்து எமது எல்லைகளை மீட்டெடுக்க இளைஞர்கள் மட்டுமன்றி அனைவருமே முழு அளவிலான பங்களிப்பைத்தர முன்வர வேண்டும்.

### குணம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமராட்சிப் பகுதி அரசியல் பொறுப்பாளர் குணம் பேசியதாவது;

தலைவர் பிரபாகரனின் சாதுரியத்தினால் தான் எமது போராட்டம் எம்மை ஏமாற்ற முனைந்த ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான புரட்சிகர விடுதலைப் போராட்டமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

### வாஞ்சி

கவிஞர் வாஞ்சிநாதன் பேசியதாவது:

எமது உரிமைக்காக அகிம்சை ரீதியிலே நாம் போராடினோம்.

காலிமுகத்திடலிலும், கச்சேரி முன்பாகவும் நாம்நடத்திய அகிம்சைப் போராட்டத்தை அலட்சியப்படுத்தியதும், எங்கள் கைகளிலே ஆயுதத்தைத் திணித்ததும் ஸ்ரீலங்கா அரசுதான்,

1948 ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி அங்கு ஒவ்வொரு மைலுக்கு ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்தி எமது [illegible] களில் 75 சதவீதமானோர் அடித்து விரட்டப்பட்டு அகதிகளாக இங்கு வந்துள்ளனர். இவற்றிற்கெல்லாம் தமிழீழம் ஒன்று தான் முடிந்த முடிவு.

### சங்கர்

தலைமைச்செயற்குழுஉறுப்பினர் சங்கர் பேசியதாவது:-

களத்திலே நின்று போராடும் விடுதலைப் புலிப்போராளிகளின் எண்ணிக்கையைவிட போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு வாழும் மக்களே பெரும்பாலும் ஷெல் பீரங்கி ஹெலித்தாக்குதல்களில் உயிர் துறக்கின்றனர். அனாதைப் பிணங்களாய்த் தெருவோரங்களில் அடையும் சாவு சரித்திரத்தில் எடுத்துரைக்கப்படுவதில்லை.

ஆனால் தியாகிகளின் மரணம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுகின்றது இன்று தமிழ் மக்களை அழிப்பதற்காகத் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, காவற்படை, ஊர்காவற்படை. குண்டர்படை என்பன முடுக்கி விடப்பட்டுள்ளன. இது ஸ்ரீலங்கா அரசினால் தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலாகும்.

ஆகவே மக்கள் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு விட முடியாது. அவர்களுக்கு ஒரு ஆற்றுக் கடமை உண்டு. விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று [illegible] அரங்கில் காட்டினால் உலக அங்கீகாரம் கிடைக்கும் எமது தலைவர் பிரபாகரனின் தலைமையில் ஒன்று திரண்டு போராட முன்வாருங்கள்.

### சூசை

வடமராட்சிப்பகுதி விடுதலைப் புலிகளின் இராணுவப் பொறுப்பாளர் சூசை பேசியதாவது:-

பொம்மர், ஷெல், ஹெலித் தாக்குதல்கள் நடைபெற்று வரும் இக் காலகட்டத்திலும் பெருந் தொகையாக மக்கள் திரண்டு வந்திருப்பதைப் பார்க்கின்றபோது எமது போராட்டத்துக்குப் புதிய உத்வேகத்தை அளிப்பதை உணர்கின்றேன்.

மேஜர் காந்தருபனும், கப்டன் கொலின்சும் தலைவர் பிரபாகரனின் பாசறையிலே இருந்தவர்கள். இந்திய வல்லாதிக்க இராணுவத்துக்கெதிராகப் பல தடைவைகள் போரிட்டவர்கள். கப்டன் வினோத் இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது நீராடிக்கொண்டிருந்த போது சயனைட் அருந்தவும் வழியின்றி இந்திய இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்.

பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட போதும் இயக்கத்தின் இரகசியங்கள் ஒன்றைக்கூட வெளியிடாமல் உறுதியோடிருந்தவர்.

இவர்களது சாதுரியத்தாலும், தியாகத்தாலும் ஸ்ரீலங்கா அரசின் பலம்வாய்ந்த கடற்படை தகர்க்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் டோரா விசைப் படகுகள் விரட்டியடிக்கப்பட்டன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில் உள்ள உங்கள்
உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
✶ கடிதங்கள் ✶ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப

DHL WORLDWIDE EXPRESS

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

24 - 7 - 1990 செவ்வாய்க்கிழமை



புதியதோர் சேவை!
★ குறுகிய காலத்தில் ★
தரமான கலர் பிலிம்
கழுவுவதற்கு
Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,


## வடக்கு - கிழக்கு மக்களுக்கு
## பிரிட்டன் ரூ. $2\frac{1}{2}$ கோடி உதவி

### அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவே வழங்கப்படும்

கொழும்பு, ஜூலை 24
வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளுக்காக பிரிட்டிஷ் அரசு 2 கோடி 50 லட்சம் ரூபா பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிதி உதவி சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள ஊடாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இப்பணத்தில் ஒருகோடி 75 லட்சத்து 50 ஆயிரம் ரூபா சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நடவடிக்கைகளுக்கும்—

அவசரமான மருத்துவவசதிகளைச் செய்து கொடுக்க 35 லட்சம் ரூபா யுனிசெப் ஸ்தாபனத்துக்கும், எஞ்சிய 35 லட்சம் ரூபா அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## சர்வகட்சி எம். பிக்கள் குழு அடுத்து மாலைதீவு செல்லும்

கொழும்பு, ஜூலை 24
அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழு எதிர்வரும் வாரத்தில் மாலைதீவு செல்லவிருக்கிறது.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது இதனை நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு நிலைமை பற்றி விளக்குவதற்க்க இக்குழு கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்தது தெரிந்ததே.

அது பற்றிய விவரங்களை சபாநாயகர் நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

மாலைதீவு விஜயத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு இத்தூதுக்குழு செல்லும் என்றும் அல்ஹாஜ் முஹம்மது சொன்னார்.

இத்தூதுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களான திரு. அனுரா பண்டாரநாயக்கா, திரு. தர்மசிறி சேனநாயக்கா, அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா, துணை அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன், ஜனாப் ஹிஸ்புல்லா, திரு. தினேஷ் குணவர்த்தனா ஆகியோரும் இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். [ஒ-எ]

## யாழ். மீதான தாக்குதல் தவிர்க்க முடியாததாகலாம்

### பி. பி. சி. செய்தியாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 24
கிழக்கு மாகாணத்தில் கடைப்பிடித்த இராணுவ உத்தியை இராணுவத் தளபதி கொப்பேக்கடுவ வடபகுதியிலும் கடைப்பிடிப்பாரானால் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் தவிர்க்கமுடியாததாகலாம்.

இப்படி பி. பி. சி. கொழும்புச்செய்தியாளர் கிறிஸ்தொபர் மொரிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கையின்போது முதலில் மக்கள் நெருக்கமாக வாழும் பட்டினப் பகுதிகளையும் தொடர்பு சாதனங்களையும் ஆயுதப்படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர் என்றும் பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்தார். (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சறோஜினி ஜெயராஜா

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சறோஜினி ஜெயராஜா 21 - 07 - 90 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் காலம் சென்ற திரு. திருமதி வேதிங்டன் ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், ஜெயராஜா [நில அளவையாளர்] வின் அன்பு மனைவியும், கொக்குவிலைச் சேர்ந்த காலம் சென்ற திரு. திருமதி ஞானரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பீறறர், யேசுராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 24 - 07 - 90 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஜெயராசா [கணவன்]
பிள்ளைகள்,

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

(13807)

### வேலுப்பிள்ளை - சின்னத்துரை

துர்க்காபுரம் தெல்லிப்பளையைச் சேர்ந்த இளைப்பாறிய P.W.D ஓவசியர் வே. சின்னத்துரை 22.07.90 அன்று காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோதினியின் அன்புத் தந்தையும், சிவநடராசாவின் (டென்மார்க்) மாமனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 23.07.90 திங்கட்கிழமை நடைபெற்றது. என்பதை அறியத் தருகின்றோம் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சு. சபாரத்தினம்

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

(13799)

## 23 படகுகளில் 700 அகதிகள்

சென்னை, ஜூலை 24
நேற்று திங்கட்கிழமை 23 படகுகளில் சுமார் எழுநூறு இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

இவர்கள் அனைவரும் பெரியார் மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செல்லமுத்து தெரிவித்தார். (இ-எ)

## கிளைமர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 24
மட்டக்களப்பு நாவலடி முச்சந்தி இராணுவ முகாமிலிருந்து ஒட்டமாவடி பாலத்திற்கு கவச வாகனம் சகிதம் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் "கிளைமர்" தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் —

இதனை அடுத்து இராணுவம் முகாமிற்கு பின் வாங்கிச் சென்றது என்றும் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## தாம்போதி திருத்தப்பட்டது

கொழும்பு, ஜூலை 24
சேதமடைந்த ஆனையிறவு தாம்போதி கனரக வாகனங்கள் செல்லக் கூடிய அளவுக்குத் திருத்தப்பட்டுள்ளதாக அரச இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [உ-எ]

## வெளியூர் செல்வோரின் விவரம் புலிகளுக்கு அறிவிக்க வேண்டும்

### நேற்றைய கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ் நகரில் இருந்து கொழும்புபோன்ற தூரஇடங்களுக்குச் செல்லும் அனைவரும் தமது அடையாள அட்டை இலக்கம் உட்பட்ட சுய விவரங்கள், பயணத்தின் நோக்கம் போன்ற தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கவேண்டும்.

நேற்று யாழ் மாநகரசபை மண்டபத்தில் வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ் உரிமையாளர்களின் கூட்டம் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். அந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதற்கமைய வெளி மாவட்டங்களுக்கான பயணம் மேற்கொள்வோர் 24 மணி நேரத்திற்கு முன்னர் தமது ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசனப் பதிவு அடிப்படையில் பட்டியல் ஒன்றைத் தயாரித்து விடுதலைப் புலிகளிடம் பஸ் உரிமையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். பிரஸ்தாப பஸ் புறப்படுவதற்கு 24 மணி நேரத்தின் முன் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்—என்று கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேறு சில தீர்மானங்கள் வருமாறு:-

★ வெளி மாவட்டங்களுக்கான சகல மினி பஸ்களும், சிறிய, பெரிய வேறுபாடு இன்றி யாழ் தனியார் மினி பஸ் சேவை சங்கத்தின் கீழேயே இயங்கவேண்டும்.

★ வெளி மாவட்டங்களுக்கான நிலையான கட்டணம் பற்றி இன்று அல்லது நாளை முடிவு செய்யப்படும். (ஒ-9)

## தொழில் நுட்ப மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் வணிக மாணவர் மன்றப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஜே.ஆர்-ராஜீவ்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாளே கூறியிருந்தார் என்றார் கருணாநிதி.

'மூன்று தினங்களுக்கு முன்னரும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தமிழகம் வந்தனர்' என்று பாரதீய ஜனதாக்கட்சியினர் கூறியது பற்றிக் கேட்கப்பட்டபோது —

'இட்டுக்கட்டிச் சொல்லப்படுகின்ற கற்பனைக் கதைகளுக்கு நான் பதிலளிக்க இயலாது'— என்றார் திரு கருணாநிதி. (உ-எ)

## கல்வி அடக்குமுறை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பான மாணவர் கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடை பெறுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் தத்தமது பாடசாலைகளில் கலந்து கொள்ளுமாறு 1990-91 ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்கள் கோரப்பட்டுள்ளனர்,

எனினும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மாணவர்களை நல்லூர் மங்கயர்க்கரசி பாடசாலையிலும் —

வடமராட்சி மாணவர்களை வட இந்து மகளிர் கல்லூரியிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் — சமூகம் அளிக்கும்படி [illegible] மாணவர் [illegible] கோரி உள்ளது. (இ)

## யுத்த முனையில் மாணவர் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ். பல்கலைக்கழக மாணவ அணியினர் நேற்று முன்தினம் யாழ்.கோட்டைப் பகுதியில் யுத்த முனைக்குச் சென்று போராளிகளுடன் இணைந்து அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அரண்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். (உ)

## யாழ். நகரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யான வீடுகள் சேதமடைந்தன.

காலைத் தாக்குதலில் யாழ். சென் பற்றிக்ஸ் வீதியில் பத்து வீடுகள் கடும் சேதமுற்றன. இருபதுக்கும் அதிகமான வீடுகள் சிறு சேதம் அடைந்தன. நான்கு வீடுகள் தரை மட்டமாகின.

இராஜேந்திரா வீதியில் 10 க்கும் அதிகமான வீடுகளும் குருநகர் சனசமூக நிலையத்துக்கு முன்பாக 10 க்கும் அதிகமான வீடுகளும் சேதமடைந்தன.

ஏனைய குண்டுகள் யாழ். கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் விழுந்து வெடித்த போதும்உயிரிழப்புகள்குறித்து ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை.

இத் தாக்குதல் சம்பவங்களையடுத்து குருநகர்ப் பகுதியிலும், அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் இருந்த பலர் [illegible] யறிச் சென்றனர். [illegible]

## இலங்கைக்கு கப்பல் அனுப்புவதற்கு மத்தியஅரசு முடிவு எடுக்கவேண்டும்

### தமிழ்நாடு ஆளுநர் கூறுகிறார்

சென்னை, ஜூலை. 24
இலங்கையில் காத்திருக்கும் அகதி மக்களை அழைத்து வர கப்பல்களை அனுப்புவது பற்றி மத்திய அரசுதான் முடிவு எடுக்க வேண்டும்.

இப்படி தமிழ்நாடு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இராமேஸ்வரம் மற்றும் பகுதிகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களை ஆளுநர் பர்னாலா சென்று பார்வையிட்டார்.

அகதிகளுக்கு படுக்கை விரிப்புகள், பாத்திரங்கள் ஆகியவற்றை ஆளுநர் விநியோகித்தார்.

கால் ஒன்றை இழந்த அகதிப் பெண் ஒருவருக்கு மூன்று சக்கர நாற்காலி ஒன்று வழங்கப்படும் என்று ஆளுநர் சொன்னார்.

இராமேஸ்வரம் துறைமுகத்துக்குச் சென்று அங்கு வந்திறங்கிய அகதிகளையும் ஆளுநர் பார்வையிட்டார்.

மன்னாரில் 20 ஆயிரத்துக்கு அதிகமான தமிழ் மக்கள் இந்தியா வருவதற்காக காத்திருக்கின்றனர் என்று அகதிகள் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் சுமார் 600 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர். (இ-எ)

## நிலக் கண்ணியில் சிக்கிய வாகனம்

கொழும்பு, ஜூலை 24
புத்தளம் மாவட்டம், மறிச்சுக்கட்டுவ என்னுமிடத்தில் நிலக்கண்ணி வெடியில் வாகனம் ஒன்று சிக்கியது.

அந்த வாகனத்தில் பயணம் செய்த மூன்றுமுஸ்லிம்கள் உயிரிழந்தனர் என்று அரசு அறிக்கை தெரிவித்தது. (அ-எ)

## வன்னியை கட்டுப்பாட்டில் கொண்டுவர தீவிர முயற்சி

### அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, ஜூலை 24
வன்னிப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஆயுதப்படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருக்கிறார்.

யுத்தத்தில் இதுவரை ஆயுதப்படையினரில் 931 பேர் கொல்லப்பட்டும், காணாமற்போயும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாநேற்று மாநாடு ஒன்று நடத்தினார்.

அப்போதே மேற்கண்ட தகவல்களை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மன்னாரில் பாரிய அகதிகள் முகாம் ஒன்றை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை அரசு நாடியுள்ளது;

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இது குறித்து விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளது;

இதன் மூலம் மன்னார் அகதி முகாம் பகுதி மோதல்கள் இடம்பெறாத பிரதேசமாகப் பார்த்துக் கொள்ளப்படும்— என்றார்

## பரவலாக ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும், ஞாயிற்றுக்கிழமையும், நேற்றும், பரவலாக ஹெலித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் வடக்கு ஆகிய பகுதிகளில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

வல்லைவெளி, வயாவிளான், நீர்வேலி, முகமாலை, கொடிகாமம் — ஆகிய பகுதிகளில் ஹெலிகள் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டு சென்றதாக அறிய வந்தது. [அ]

## ஈழம் கோரிக்கையை கைவிட மாட்டோம்!

### நினைவுக் கூட்டத்தில் யோகி உரை

யாழ்ப்பாணம், ஜூலை 23
மாநில சுயாட்சித் திட்டத்தை பரிசீலிக்கத் தயார் என நாம் விடுத்த அறிக்கையை பலர் தவறாக புரிந்து கொண்டுவிட்டனர். நாம் அவ்வாறு அறிவித்தால் தனி ஈழக் கோரிக்கையைகை விட்டு விட்டதாக அவர்கள் கருதுகிறார்கள் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமாதானத் தீர்வை ஏற்படுத்தும் நல்லெண்ணம் எமக்கு இருக்கிறது என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டவே நாம்அவ்வாறு அறிவித்தோம்

ஆனால் எங்கள் உயிரினும் மேலான தனி ஈழத்தை- தனி ஈழக் கோரிக்கையை — நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம்.

— இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி.

நேற்று மாலை கல்வியங்காடு சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதல் பிரிவின் தலைவன் லெப்ரினன்ட்செல்லக்கிளியின் ஏழாவது நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச்சொன்னார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன் தனது இரண்டு மாடுகளை விற்று எமது இயக்கத்திற்கு இயந்திரத் துப்பாக்கி ஒன்றை வாங்கியவர் செல்லக்கிளி...

தலைவர் பிரபாகரனுக்கு அடுத்தபடியாக அமைப்பின் மூத்த தலைவர் செல்லக்கிளி அம்மான் ஆவார்.

அன்று முப்பது பேருடன் ஆரம்பமாகிய எமது போராட்டம் இன்று பல திருப்புமுனைகளுடன் முன்னேறியுள்ளதென்றால் அதற்குக் காரணம் போராளிகளின் தியாகமாகும் —என்றார்.

திரு: யோகரட்ணம் யோகி விடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு. பேபி சுப்பிரமணியம் ஆகியோர் செல்லக்கிளியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தனர்- (உ-5)

## காயமுற்ற போராளி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
சில நாட்களுக்கு முன்னர் யாழ். கோட்டை இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது காயமடைந்த அமுது (ஐயாசாமிராசா-பருத்தித்துறை) என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி நேற்று மரணமானார். (உ-9)

## வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையிட்டு வருவதாகவும் —

அதற்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கிவருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-9)

## ஆனையிறவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோதலில் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்கப்டன்பிரபா, டெனா, சிட்டன், முத்து, தங்கப்பன் ஆகிய ஐவரும் வீர மரணமடைந்தனர்.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை —

முல்லைத்தீவு-பரந்தன் வீதியில் 3ஆம் வாய்க்காலில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 9 ஆயுத படையினர் உயிரிழந்தனர் என்றும்35பேர் காயமடைந்தனர் என்றும் அரச அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ-9)

## போரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவி- தாய்மார் சங்கம் ?.எம்.எஸ். சபை, பல்கலைக்கழக மாதர் பிரதிநிதி, தலைவி- பெண்கள் நிலையம், அதிபர்- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி முன்னாள் அதி அதிபர் - யாழ் இந்து மகளிர் கல்லூரி, அதிபர்- வேம்படி மகளிர் உயர் கல்லூரி ஆகியோர் கூட்டாக ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"தமிழ் மாதரின் குரல்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு கிழக்கில் பெரும் அவதியும், பீதியும், பயமும் நிலவும் இக்கால கட்டத்தில்- பயங்கரப் போரின் மத்தியில் வாழவேண்டிய நிர்ப்பந்தமான இச் சூழ் நிலையில்- மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் இருபகுதியினராலும் சட்டபூர்வமாகக் கவனத்திற்கு எடுக்கப்படாத இந்த நிலையில்- தமிழ்ப் பெண்களாகிய நாம் எமது மக்களின் அபிலாஷையை வெளியிட விரும்புகிறோம்;

ஜூலை 18 ஆம் திகதி உதயனில் வெளியாகிய வட பகுதி மதத் தலைவர்களின் போர் நிறுத்த வேண்டுகோளை முழுமனதாக ஆமோதித்து, தமிழ் பெண்களாகிய எமது மகஜரையும் இருதரப்பினரும் பரிசீலித்து நல்லதொரு முடிவுக்கு வர உடனடியாகப் போரை நிறுத்தும்படி கோருகிறோம். மேலும் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமைப்புகளை அனுமதிக்கும்படியும் கோருகிறோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org